# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 62 பிரசோற்பத்தி தை 14 (28 01 . 1992) செவ்வாய்


நல்லூர் கிளை நூலகம்

## யுத்தத் தகவல் திரட்டவே அமெரிக்க வானொலி நிலையம்

வடக்குக் கிழக்குப் பகுதியில் நடைபெறும் போர் மற்றும் சம்பவங்களை உடனுக்குடன் வெளி உலகுக்கு அறிவிக்கவே அமெரிக்க வானொலி நிலையம் (VOA) சிலாபத்தில் அமைக்கப்படுவதாக 'செடாக்' என்ற கத்தோலிக்க நிறுவனத்தின் தலைவர் வண. ஒஸ்வால்ட் பேர்த் தெரிவித்துள்ளார். இவர் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே இத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை

—04ஆம் பக்கம் பார்க்க

# சமாதான முன் முயற்சிகளுக்கு கனடா உதவும் என அறிவிப்பு

## ஏற்க மறுக்கிறது ஸ்ரீலங்கா அரசு

வடக்கு, கிழக்குப் பகுதியில் நடத்திவரும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசிடம் தாம் கோரவுள்ளதாக கொழும்பு வந்துள்ள கனேடிய 'அவதானிப்புக் குழு'வின் தலைவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை அரசு நிறுத்தாவிடின் கனடா அரசு ஸ்ரீலங்காவுக்கு வழங்கும் உதவி குறித்து மீள் பரிசீலிக்க வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் அவர் எச்சரித்தார்.

விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் ஒரு சமரசத்தை ஏற்படுத்த கனடா தயார் நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவை குறித்து கனேடியக் குழு கொழும்பில் வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரட்னவுடன் பேச்சு நடாத்தியுள்ளது. இக்குழு ஜனாதிபதியையும் சந்திக்கவுள்ளது

இதனிடையே விடுதலைப்

—04ஆம் பக்கம் பார்க்க

## படையினர் அரந்தலாவையில் கண்ணிவெடி தேடுகின்றனர்!

அம்பாறை அரந்தலாவை பகுதியில் நேற்று முன்தினம் வெடித்த கண்ணிவெடி பல மாதங்களுக்கு முன்னரே அவ் வீதியில் புதைக்கப்பட்டிருந்ததாக இராணுவ வட்டாரம் தெரிவித்துள்ளன.

இந்த வீதிப்பகுதியில் கண்ணிவெடிகள் மேலும் உண்டா எனத் தாம் பொது மக்கள் உதவியுடன் தேடி வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## மன்னார் கடல் ரோந்து; புதிய வகைப் படகுகள்

ஆழம் குறைந்த கடற்பகுதியில் செல்வதற்கு வசதியான நீர் உந்து விசை (JET PROPELLED) கொண்ட புதிய ரோந்துப் படகுகளை கடற்படையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

கடற்படையினரின் டோரா விசைப் படகுகள் செல்ல முடியாத கடல் பகுதியில் இந்த புதிய ரோந்துப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பதுளையில் படையினர் உஷார் புதிய முகாம்களும் அமைப்பு

பதுளையில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களும் உஷார் நிலையிலிருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளன. இராணுவ முகாம்களும் அங்கு புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகள் இங்கு தாக்குதல் நடத்தலாம் என கிடைக்கப்பெற்ற தகவல்களையடுத்தே இந்த எச்சரிக்கை நடவடிக்கைகளாம்

இதேவேளை மலையகத்தில் இளைஞர்கள் கண்டபடி பொலிஸார் கைது செய்யப்படுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக பதுளை எம். பி எம்.வின் விக்கிரமரட்ன தெரி

—04 ஆம் பக்கம் பார்க்க

## விமானப்படைப் பயிற்சி பாதிக்கப்பட்டுள்ளதாம்

சீனன்குடா விமானத்தளக் குண்டு வெடிப்பினால் விமானப்படை விமானிகளின் பறக்கும் பயிற்சி பாதிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பயிற்சி விமானங்கள், விமான ஓடுபாதை என்பன சேதமடைந்தமையே இதற்கு காரணம் எனவும் தெரிவிக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அரச எதிர்ப்பு கண்காட்சி அடித்து நொருக்கப்பட்டது

ஸ்ரீலங்கா அரச படைகளினால் புரியப்படும் மனித உரிமை மீறல்களை சித்தரிக்கும் கண்காட்சி ஆயுதக் கும்பலினால் நேற்று முன்தினம் அடித்து நாசமாக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் நடைபெற்று வந்த இக்கண்காட்சி அரங்கத்தினுள் புகுந்த கும்பல் ஒளிநாடா காட்சியகத்தை அடித்து நொருக்கிவிட்டு சென்றதாக மாத்தறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம், பி, சமரவீர பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்,

## கிழக்கில் அதிரடிப்படையை நிறுத்த ஆலோசனை

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் வடபகுதிக்கு அங்கிருந்து துருப்புக்களை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கிழக்கு மாகாணத்தில் விசேட அதிரடிப் படை (S.T F.) யை நிறுத்திவிட்டு துருப்புகளை வட பகுதி நடவடிக்கைக்கு அனுப்பலாம் என அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விமானப்படைக்கு பத்திரிகைகள் கண்டனம்

சீனன்குடா விமானத்தளத்திற்கு பத்திரிகையாளர்களை விமானப்படையினர் செல்ல அனுமதிக்காமைக்கு கொழும்புப் பத்திரிகைகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

பாதுகாப்புக் கருதியே செய்தியாளர்கள் அனுமதிக்கப்படவில்லை என விமானப்படை

—04 ஆம் பக்கம் பார்க்க

## காமினி, லலித் வெளிநாடு பயணம்

முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலியும், காமினி திஸநாயக்காவும் வெளிநாடுகளில் அரசுக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட

—04 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் தொண்டமான் செல்கிறார்: சலுகையும் உரிமையும் சமனாக வழங்க வேண்டும்

ஆண்களுக்கு எந்த வகையிலும் பெண்கள் சளைத்தவர்கள் அல்லர் ஆண்களுக்கு இருக்கும் அனைத்து உரிமைகளும் சலுகைகளும் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு அமைச்சர் தொண்டமான் கருத்து வெளியிட்டுள்ளார்.

சர்வதேச மகளிர்தினத்தையொட்டி கொழும்பு சமுத்திரா ஹொட்டலில் நடைபெற்ற 5 நாள் கருத்தரங்கில் கலந்து கொண்ட அமைச்சர் அங்கு மேலும் பேசுகையில் முதன்முதலாக ஒரு பெண்ணைப் பிரதமராகத் தேர்ந்

—04ஆம் பக்கம் பார்க்க

## புதிய யுத்த டாங்கிகளிலும் இயந்திரக் கோளாறு

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் முன்னாள் வார்சோ அமைப்பிடமிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் கொள்வனவு செய்த சிறிய யுத்த டாங்கிகளிலும் கோளாறுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இராணுவ பொறியியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபரில் புதிதாக கொள்வனவு செய்த 25 ஹங்கேரித்தயாரிப்பு டாங்கிகளில் 4 இயந்திரக்கோளாறு

—04 ஆம் பக்கம் பார்க்க

## 800 மில். டொலர் உதவிக்கு உலகவங்கி நிபந்தனை

தம்மால் கூறப்பட்ட சிபார்சுகளை ஸ்ரீலங்கா அரசு அமுல் படுத்தியிருந்தால் மட்டுமே ஸ்ரீலங்கா அரசுக்கு உதவி வழங்குவது குறித்து ஆலோசிக்குமாறு உலகவங்கி கோரியுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி பாரிஸில் மாநாடு நடத்தவுள்ள உதவி வழங்கும் நாடுகளுக்கே உலகவங்கி

...04ஆம் பக்கம் பார்க்க

## இவர்களும் தொடர்பாம்

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுடன் மலேசியா, சிங்கப்பூர் வாழ் தமிழ் மக்களுக்கும் தொடர்பு உள்ளதை தாம் கண்டுபிடித்துள்ளதாக ராஜீவ் கொலையை விசாரித்து வரும் புலனாய்வுக்குழு அறிவித்துள்ளது.

## 650 அகதிகள் நேற்றுப் புறப்பட்டனர்

இலங்கைத் தமிழ் அகதிகளின் இரண்டாம் கட்டக் குழுவினர் நேற்றுச் சென்னையிலிருந்து திருமலை நோக்கிப் புறப்பட்டனர்.

எம். வி. அக்பர் என்ற கப்பலில் சுமார் 650 அகதிகள் நேற்றுப் புறப்பட்டனர். இக்கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கவென இந்தியக்கடற்படையின் குல்நார், கங்காதேவி

— 04 ஆம்பக்கம் பார்க்க

## தமிழக எல்லையிலும் கன்னடர்களின் தொல்லை!

தமிழக எல்லையில் உள்ள ஒரு காவல் நிலையத்தையே கன்னடர்கள் வந்து தாக்கி, காவலர்களைக் காயப்படுத்தி விட்டுச் சென்றிருக்கிறார்கள். பாகிஸ்தானியர்கள் எல்லையில் இந்தியர்களைத் தாக்குவது போல கன்னடர்கள் தமிழக எல்லைக் கிராமங்களுக்குள் வந்து தாக்குதல் நடத்திவிட்டுச் செல்கிறார்கள்.

★ ★ ★

கர்நாடக நகரங்களிலும், கிராமங்களிலும் ஊருக்கு ஊர் மக்கள் 'காவிரி நடவடிக்கைக் குழு' என்ற ஒன்றை அமைத்துக்கொண்டு அதன் மூலமாகத் தமிழர்க்கு எதிரான ஒவ்வொரு நடவடிக்கையையும் (தாக்குவது கூட) எடுத்து வருகிறார்கள்.

★ ★ ★

இதுவரை தமிழகம் வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 30 ஆயிரத்தையும், கொல்லப்பட்ட தமிழர்களின் தொகை நூறையும் தாண்டிவிட்டது. தமிழர்கள் தர்மபுரி, பெரியார், கோவை மாவட்டங்களில் அதிகளவில் தஞ்சமடைந்துள்ளனர்.

# துரத்தப்பட்ட தமிழர்கள் வீடுகளில் கன்னடர்கள் குடியேற்றம்!

### பதிலடி கொடுக்கலாமென்ற அச்சத்தில் தமிழ் இளைஞர்கள் கைது

கன்னடத்தில் தமிழர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் பற்றி 'முரசொலி' கடந்த ஞாயிறு பதிப்பில் வெளியிட்ட புதிய தகவல்களை வாசகர்களில் பலர் பாராட்டியுள்ளதோடு மேலும் தகவல்களை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது கிடைத்து வரும் மேலதிகத் தகவல்கள் இங்கே:-

கன்னடத்தில் ஸ்ரீரசம்புரம் பகுதியில் உள்ள தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அங்குள்ள பெல்லரி சிறைகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இப்பகுதியில் அதிகளவிலுள்ள தமிழ் இளைஞர்கள் கன்னடர்களுக்கு 'பதிலடி' கொடுப்பார்கள் என்ற சந்தேகம் கன்னடப் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளமையே இதற்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

கர்நாடகத்தின் வேறு பல பகுதிகளிலும் மீண்டும் வன்முறை மூளைத்து தலைவிரித்தாடுகிறது.

### தமிழர்களின் பயிர்களுக்கும் தீ

காவிரிப் படுக்கையின் ஒரு பகுதியான கொல்லேகால், சாம்ராஜ்நகர், குண்டலுபேட்டை பகுதிகள் தமிழக எல்லைப் பகுதிகளில் உள்ளன. இந்தப் பகுதிகளில் தமிழர்களினால் செய்கை பண்ணப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெல், கரும்புப் பயிர்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன.

### கொடூரமான ஆயுதங்கள்

கொடூரமான ஆயுதங்கள், பெட்ரோல் குண்டுகள் என்பவற்றைத் தமிழர் மீதான தாக்குதலுக்கு கன்னடக் குண்டர்கள் பயன்படுத்துகிறார்கள்.

### தமிழர் வீடுகளில் கன்னடர்கள்

பெரியார், கோவை மாவட்டங்களை ஒட்டிய கர்நாடகப் பகுதிகளில் தமிழர்களை அடித்துத் துரத்திவிட்டு தமிழர் வீடுகளிலும் நிலங்களிலும் கன்னடர்கள் குடியேறி அவற்றை தங்களுடைய தாக்க முயற்சியெடுத்து வருகிறார்கள் - அரசாங்கத்தின் துணையோடு.

### ஏனைய பகுதிகளிலும்...

கர்நாடகத் தலைநகர் பங்களூரில் நடந்த தாக்குதல் பற்றி மத்திய அரசு அறிக்கை கேட்டிருப்பதால் ஏமாற்றமடைந்த கர்நாடக அரசு இப்போது காவிரி டெல்டா பகுதிகளில் கலவரங்களைத் தூண்டிவிட்டுள்ளது.

### சாரதிகள் மீது தாக்குதல்

பங்களூர், மடிவாளம் பகுதிகளில் தமிழக பதிவெண்களுடைய பல லொறிகள் தீக்கிரையாக்கப்பட்டன. சாரதிகள் தாக்கப்பட்டனர்.

## தபால்கள், முத்திரைகளைப் பெற நேற்று மக்கள் முண்டியடிப்பு!

யாழ் பிரதான தபாற்கந்தோர் முன்பாக நேற்றுப் பெருந்தொகையான மக்கள் நின்றதை அவதானிக்க முடிந்தது.

அநேகமானவர்கள் பிறநாட்டில் உள்ள உற்றார், உறவினரின் கடிதங்களைப் பெறுவதற்காகவும் முத்திரைகளை வாங்குவதற்காகவுமே அங்கு வந்திருந்தனர்.

நவம்பர் மாத இறுதிக்குப் பின்னர் இப்பொழுது தான் கடிதங்கள் கப்பலில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (16

## இப்பொழுது 8 உறுப்பினர்களினது கடவுச்சீட்டுக்களும் இரத்து!

ஐக்கிய தேசியக்கட்சி அதிருப்தியாளர்கள் குழுவைச் சேர்ந்த எட்டு உறுப்பினர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்கள் இனிமேல் வெளிநாட்டுப் பயணங்களின்போது இராஜதந்திரிகளுக்கான வசதிகளைப் பெற முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு வழங்கப்பட்ட இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டுக்களை திருப்பி ஒப்படைக்குமாறும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் கேட்டுள்ளது.


## தொழிற் பயிற்சிகள்

எங்கும் இலகுவாகத் தொழில்வாய்ப்புப் பெற குறைந்த காலத்தில் சிறந்த பயிற்சிகள்

O/L பரீட்சை எழுதி முடித்த மாணவர்கள் குறுகிய காலத்தில் வாழ்க்கைக்கு உபயோகமான ஒரு தொழில் கல்வி கற்க

### அரிய சந்தர்ப்பம்!

★ றேடியோ, T.V., வீடியோ டெக் றிப்பியறிங்
சகல இன றேடியோ, T.V, வீடியோ டெக் தொழிற்பாடு, திருத்துதல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

★ றீவைண்டிங்
மின்மோட்டார், மின்விசிறி, ரான்ஸ்போமர் மற்றும் மின்சார உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்; 3 மாதம்

★ எலெக்ரிக்கல் வயறிங்
வீட்டு மின்சார வயறிங் வேலைகள், மின்சார உபகரணங்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

★ Engineering Drawing
(1 ஆம் வருட பொறியியல் பீட மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்)

★ Air Condition & Refrigeration Engineering
காலம்; 4 மாதம்

★ Motor Bicycle, Water Pump Mechanism
காலம்; 5 மாதம்

★ Computer Programming (Basic)
காலம்; 3 மாதம்

★ Special Spoken English With Grammar
குறுகியகால தினசரி வகுப்புக்கள்
காலம்; 2 மாதம்

சகல தொழிற்பயிற்சிகளுக்கும் செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்

வகுப்புக்கள் வாரநாட்களிலும் சனி, ஞாயிறு நாட்களிலும் நடைபெறுகின்றன.

மீண்டும் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பம் :

03 . 02. 1992 (வார நாட்கள்) 9. 00 A. M.
02. 02. 1992 (சனி, ஞாயிறு) 9. 00 A. M.

விபரங்களுக்கு :-

## Jaffna Technical Institute

52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

முக்கிய குறிப்பு: சகல இன றேடியோ, T. V., வீடியோடெக் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். மேற்படி பொருட்களுக்குரிய I. C. ரான்சிஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

01073


## அறிதலும் பிரார்த்தனையும்

காரைநகர் மேற்கைச் சேர்ந்த திரு. வைரமுத்து நல்லையா 26. 1. 92 ஞாயிறுமாலை வண்மேற்கு வைத்தியசாலையில் (கங்காதரன் டிஸ்பென்சரியில்) காலமானார். இவர் திருமதி விஜயலக்ஷ்மியின் கணவரும் திரு. இராதாகிருஷ்ணன் திருமதி சீதாலக்ஷ்மி ஆகியோரின் தந்தையுமாவார். நாட்டுநிலை காரணமாகவும் இடம்பெயர்ந்து வாழும் காரைநகர் மக்களின் அவலநிலையை முன்னிட்டும் 26. 1. 92 மாலை மரணமடைந்த உடனேயே இவரின் ஈமச்சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. திரு. வை நல்லையாவை அறிந்தவர்கள் இவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கவும்.

மா. வைத்தியநாதன்
01072

# பங்களாதேஷின் இரு தீவுகளை இந்தியா கைப்பற்றியது!

இந்திய எல்லைப் பாதுகாப்புப்படையினர் பங்களாதேஷின் இரு தீவுகளைக் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சிறிய தீவுகளில் முகாம்களையும் இவர்கள் அமைத்துள்ளனர்.

நூற்றுக்கும் அதிகமான குடும்பங்களின் உடைமைகளைத் துப்பாக்கி முனையில் இந்தியப் படையினர் சூறையாடியதாகவும் தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

பிந்திய செய்தி:- இங்கு இரு தீவுகளையும் விட்டு இந்தியப்படைகள் வெளியேறும் என இந்திய அரசு அறிவித்துள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு
### 1-ம், 2-ம் தவணைப்பணம்

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செயற்படும்

| | | |
|---|---|---|
| **இரண்டாம் வருடம்** | | |
| மருத்துவபீடம் | 27. 01. 92 | 1. 30—3 00 பி. ப |
| கலைப்பிரிவு | 31 01. 92 | 1. 30—3 00 பி. ப |
| வர்த்தகப் பிரிவு | 07. 02. 92 | 1. 30—3. 00 பி ப |
| வியாபார நிர்வாகப் பிரிவு | | |
| **மூன்றாம் வருடம்** | | |
| மருத்துவ பீடம் | 28 01. 92 | 9 00—12 00 மு. ப |
| கலைப்பிரிவு | 03. 02. 92 | 9. 00—12. 00 மு. ப |
| வர்த்தகப்பிரிவு | 10. 02. 92 | 9. 00—12 00 மு ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |
| **நான்காம் வருடம்** | | |
| மருத்துவ பீடம் (4-ம், 5 ம் வருடம்) | 29 01. 92 | 1. 30—3. 00 பி. ப |
| கலைப்பிரிவு | 05 02. 92 | 1. 30—3. 00 பி. ப |
| வர்த்தகப்பிரிவு | 11 02. 92 | 1. 30—3 00 பி. ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |
| **2-ம், 3-ம், 4-ம் வருடம்** | | |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 30 01 92 | 9 00—12 00 மு. ப |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 06 02. 92 | 9 00—12 00 மு ப |
| | 12. 02. 92 | 9 00—12 00 மு. ப |

**கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை**

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

01074



★ ★ ★ ★

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருஷம் தை மாதம் 15-ம் நாள் (29- 01- 1992) புதன் கிழமை முற்பகல் 8 00 மணி முதல் 10. 00 மணிவரையுள்ள கர்க்கடக லக்கின சுபமுகூர்த்த வேளையில்.

எமது கனிஷ்ட புத்திரன்
நிறை நாடசெல்வன்
**சர்வலோகராசா**
ஒப்பு நோக்குநர் முரசொலி
(PROOF READER)
வ. பி. போ. ச பருத்தித்துறை
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
நிறை நாட்செல்வி
**செந்தமிழ்செல்வி**
அவர்களுக்கும்

நல்லூர் சிவன்கோவில் மண்டபத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி கனகலிங்கம் செல்லம்மா
நீர்வேலி மத்தி
நீர்வேலி.

திருவாளர் பத்மநாதன்
திருமதி அன்னலக்சுமி
''அன்னை இல்லம்''
103/1 கோவில் வீதி
நல்லூர்

01071


# பதுளையில் கைதான 40 பேரும் மகஸீன் சிறைக்கு!

பதுளை- ஹிந்தகலையில் இடம்பெற்ற கொள்ளை, கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 40 பேரும் தற்போது மகஸீன் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்தார்.

# தமிழருக்கு உதவவேண்டியபொறுப்பு தமிழகத்துக்கு உண்டு

## சென்னையில் செல்லச்சாமி

தமிழர்களுக்கு உதவ வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழகத்துக்கு உண்டு என இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி சென்னையில் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் கலை, பண்பாடு என்ற ஏதோ ஒரு வகையில் தமிழகத்துடன் தொடர்பு உள்ளவர்களாகவே உள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# யாழ்தேவி ரயில் கொள்ளையர் ராகமையில் சிக்கினர்!

யாழ் தேவி ரயிலில் தமிழ்ப் பயணிகளிடம் கொள்ளையிட்டுவந்த இருவர் ராகமையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

இவர்களிடமிருந்து தமிழ்ப் பயணிகளிடம் கொள்ளையிடப்பட்டதாகக் கருதப்படும் ஏழு தங்கச் சங்கிலிகள், ஏழு தங்க மோதிரங்கள் மற்றும் ரொக்கப்பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

ரயிலில் பொருள்களை இழந்தவர்கள் ராகம பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்மொழிமூல பாடசாலை சுவிஸில் ஆரம்பமாகிறது!

சுவிட்சர்லாந்தில் உள்ள லுற்சேர்ன் மாநிலத்தில் வாழும் சுமார் 30 தமிழ்க் குடும்பங்களது குழந்தைகளின் நன்மைகருதி இங்கு ஓர் தமிழ் சிறுவர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இங்குள்ள பிரபல சமூக சேவைகள் நிறுவனமான 'கரிதாஸ்' என்ற அமைப்பின் உதவியுடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

6-11 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இங்கு பயில்கின்றனர்.

# வீதி ஒழுங்கு கண்காணிப்பில் தமிழீழ காவல்துறையினர்!

தமிழீழ காவல் துறையினர் நேற்று அதிகாலை தொடக்கம் நகரின் பிரதான வீதிகளில் போக்குவரத்து ஒழுங்கு கடமையில் ஈடுபட்டிருந்தனர்

அதிகரிக்கும் வீதி விபத்துக்களை தடுக்கும் பொருட்டு இப்பணி தொடர்ந்தும் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

நேற்றைய தினம் வீதி விதிகளை மீறிய பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர். (16)

# எயர்லங்கா விமான டிக்கட் விற்பனையில் ஊழல்!

எயர்லங்கா விமான டிக்கட் விற்பனையில் இடம்பெற்ற ஊழலில் ஒன்று அம்பலமானது.

இச் சம்பவம் தொடர்பாக எயர்லங்கா ஊழியர் ஒருவரும் இரண்டு வெளிநாட்டுப் பிரயாண முகவர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# அனுரா பதவிக்கு வருவதை விரும்பாத தாய்மாமன்!

சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை அனுராவுக்கு வழங்கினால் தான் கட்சியிலிருந்தே விலகப் போவதாக சுதந்திரக்கட்சியின் முக்கிய பிரமுகரான கேணல் அனுருத்தரத்வத்த எச்சரித்துள்ளார்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 3 மாத விடுமுறையில் வெளிநாடு செல்வதனால் பாராளுமன்றத்தில் பதில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி அனுராவுக்கு வழங்கப்பட்டுள்ளதையும் ரத்வத்த எதிர்த்துள்ளதாக அறியப்படுகின்றது

அனுரா பதில் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்ட தகவல் வெளியானதும் 3 மாத விடுமுறையில் செல்ல ரத்வத்த முயன்றதாகவும் சொல்லப்படுகின்றது.

திரு. அனுருத்தரத்வத்த, திரு. அனுரா பண்டாரநாயக்காவின் தாய்மாமன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வலைப்பந்தாட்ட போட்டி

திருக்குமரன் வெற்றிக்கேடயத்திற்காக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் திருமகள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடத்தும் வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஒரு ஆட்டத்தில், இறால் கொடபேல் அணி லைக்கிங் அணியை 20:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தது, இன்னொரு ஆட்டத்தில் யாழ் தொழில் நுட்பக் கல்லூரி அணியை குருநகர் சென்றோஸ் அணி 16: 13 என்ற புள்ளிகள் அடிப்படையில் கடும் போட்டியின் பின் வென்றது செல்வி மேரி கிறசென்சியா சாதுரியமாக வெற்றிக்கு வழிவகுத்தார். (16)

### பிரிட்டனில் ஒரு பெண் குரல்

## ஆண்களின் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும்

பிரிட்டிஷ் பாரளுமன்றத்தில் ஆண்களின் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும் என பெண் எம்.பி. ஒருவர் குரல் எழுப்பியுள்ளார்.

கன்சர்வேடிவ் கட்சியின் பெண் எம்.பி.யான தெரேஸா நோர்மன் என்பவர் இது சம்பந்தமாகக் கருத்துத்தெரிவிக்கையில். இரட்டை உறுப்பினர் தொகுதிகளை ஏற்படுத்தி அதில் ஓர் ஆணும் பெண்ணும் தேர்ந்தெடுக்கப்படத் தக்கதாக ஒரு வாக்காளருக்கு இருவாக்குகள் அளித்து அவற்றைக் கட்டாயமாக ஆணுக்கும் பெண்ணுக்குமாக வாக்களிக்கச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

650 பேர் கொண்ட பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தற்போது 44 பெண்களே உள்ளனர். இதனிடையே இவரது யோசனை முட்டாள்தனமானது என இவரது கட்சியைச் சேர்ந்த ஆண் எம்.பி, பெட்ரிக் கோர்மார்க் என்பவர் கூறியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பயங்கரவாதத் தடைச் சட்டவழக்கு

## கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தமிழ் இளைஞர் விடுதலை

விடுதலைப்புலிகளைப்பற்றி தகவல்கள் தரவில்லை என்று தமிழ் இளைஞர் ஒருவர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் அவ் இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்.

ஏறாவூரைச் சேர்ந்த வ. சந்திரகுமார் (21) என்ற இளைஞன் மீது தொடரப்பட்ட வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவர் மீதுள்ள குற்றச்சாட்டுகளை சட்டமா அதிபர் விலக்கிக் கொள்வதையடுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது;

### பல நோ. கூ. சங்கங்களில்

## மண்ணெண்ணெய் விலை ஒரு லீற்றர் 30 ரூபா

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையில் வர்த்தக குழு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாவனையாளர்களுக்கு விநியோகம் செய்யும் மண்ணெண்ணெய் விலையை நிர்ணயித்துள்ளது.

இதன்படி மண்ணெண்ணெய் 1 லீற்றர் 30 ரூபா வீதம் விற்பனை செய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது பாவனையாளர்களின் வாழ்க்கைச் செலவை குறைக்கும் நோக்கத்துடனேயே இவ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

தற்போது கையிருப்பில் உள்ள மண்ணெண்ணெய் விநியோகம் முற்றுப் பெற்ற உடன் மேலும் விலைகுறைப்புச் சம்பந்தமான சாத்தியக்கூறு பற்றி ஆராய்வது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**யுத்தத் –**
சிலாபத்தில் அமெரிக்க வானொலி நிலையம் அமைக்கும் பணி நிறுத்தப்படாது என பிரதமர் டி.பி விஜேதுங்க பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

**விமானப்படைக்கு ..**
யினர் காரணம் கூறுகின்றனர் அப்படியானால் எப்படி பிரதமர் விஜேதுங்கவும் ரூபவாஹினி குழுவும் அங்குசெல்ல அனுமதிக்கப்பட்டனர் என அப்பத்திரிகைகள் கேள்வி எழுப்பியுள்ளன.


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை.

## தையல் பயிற்சி ஆசிரியர்கள்

மேற்படி பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்றப்பட்டதற்கான தகைமைச் சான்றிதழ் உள்ள அனுபவம் உள்ளோர் 31. 01 92க்கு முன் விண்ணப்பிக்கவும். 01 02 92 முற்பகல் 10.00 மணிக்கு பணிமனையில் நடைபெற உள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் தரவும்.

## தையல் பயிற்சி மாணவர்கள்

மேற்படி பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை 01 02. 92க்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்கவும். இப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படும். ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். 03 02 92 முற்பகல் 10.00 மணிக்கு பயிற்சி ஆரம்பமாகும்.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
27. 01. 92.

01076


### ★ பாராளுமன்றத்தில் வாசுதேவா

## புத்தரின் போதனைகளை மீறி பிக்குமார் வடக்கே வந்தனர்

மகா நாயக்க தேரோ வடபகுதி சென்று நாகதீப விகாரையை வணங்கிவிட்டு, யுத்த நிலவரத்தையும் பார்வையிட்டு யுத்தத்தை முன்னெடுக்குமாறு ஆசீர்வதித்துவிட்டு வந்திருக்கின்றார். இவர் புதியதோர் பௌத்த சாசனத்தை உருவாக்கப் போகின்றாரோ?.

நவசமசமாஜக் கட்சித்தலைவரும் இரத்தினபுரி மாவட்ட ஐ சோ முன்னணி எம்.பியுமான வாசுதேவ நாணயக்கார இவ்வாறு பாராளுமன்றத்தில் வினா தொடுத்தார்

'போர்களைத் தவிர்க்கவும், மனித உயிர்களைப் பாதுகாக்கவுமே புத்தபெருமான் முற்பட்டார். ஆனால் மகா நாயக்க தேரோ இவ்விதம் செயற்பட்டுள்ளார்.

'தமிழர்கள் தாம் வாழும் இடங்களைப் பாதுகாக்க முற்படும்போது அது தேசத் துரோகச் செயலென பௌத்த குருமார் கிளர்ந்தெழுகின்றனர்.

'பௌத்த கோயில்களுக்குரிய காணிகள் சிங்களப் பிரதேசக் காணிகள் 99 வருடக் குத்தகைக்குக் கொடுக்கப்படும்போது, வெளிநாட்டாருக்குத் தாரை வார்க்கப்படும்போது ஏன் எதிர்த்துப் பேசுவதில்லை.?' தேசாபிமானத்திலும் இரட்டை வேடமா? என்று அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

## அச்சுவேலியில் ஹெலி தாக்கு

நேற்று நண்பகல் 11மணியளவில் அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் ஹெலிகப்டர் ஒன்று கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

கட்டுவன் பகுதி படையினரும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்

**650 அகதிகள் –**
ஆகிய இரு கடற்படைக்கப்பல்களும் கூடவே புறப்பட்டன.

நேற்றுப் புறப்பட்ட அகதிகளுடன் இதுவரை 1300 இலங்கை அகதிகள் திருமலை திரும்பியுள்ளனர்.

இலங்கை அகதிகளின் மூன்றாவது குழுவினர் எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி புறப்படுவர்.

**காமினி...**
வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் சில நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது'

**சலுகையும் –**
கெடுத்த நாடு இலங்கைதான் என்றும் குறிப்பிட்டார்

இ தொ கா. வில் பெண்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறதென்றும் அமைச்சர் மேலும் சொன்னார்

**800 மில்...**
இக்கோரிக்கையை சமர்ப்பித்துள்ளது.

தாம் விதித்த நிபந்தனைகளை ஸ்ரீலங்கா நிறைவேற்றியிருந்தால் 800 மில்லியன் அமெரிக்க டொலரை உதவியாக வழங்கலாம் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

**புதிய...**
கண்டுள்ளதாம்,

இதேவேளை இந்த ஹங்கேரித்தயாரிப்பு டாங்கிகள் அதிகம் பாரம் உள்ளதாக இருப்பதால் மணற்பரப்பிலோ அல்லது கடல்வழியால் தரையிறக்கப்படும் போதோ புதைந்துவிடக்கூடியவை என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

80ஆயிரம் அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வோரு டாங்கியும் கம்யூனிஸ நாடுகளின் வீழ்ச்சியின் பின்னர் ஏற்றுமதி செய்யப்படுபவையாகும்

ஏற்கனவே சீனாவிலிருந்து கொள்வனவு செய்த கடற்படை பீரங்கிப்படகிலும் இயந்திரக்கோளாறு கண்டுபிடிக்கப்பட்டமை தெரிந்ததே.

**நாயக்க...**

### வெளியிடப்பட்டுள்ள

## வசதிக்கட்டண ஆசிரியர்பற்றிய ஆட்சேபனைகள் ஏற்கப்படும்

கல்விச் சேவைஆணைக்குழுவினால் யாழ்ப்பாணக் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட வசதிகள் சேவைகள் கட்டண ஆசிரியர்களாக இருந்து பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுத் தகுதி பெற்றவர்களின் பெயர்கள் நேற்று முதல் சகல கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட இவ் ஆசிரியர்கள் பற்றிய ஐயப்பாடுகள் ஆட்சேபனைகள், முறையீடுகள் ஏதும் இருப்பின் தம்மிடம் உடன் எழுத்து மூலம் தொடர்புகொள்ள வேண்டுமென யாழ் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாதம் முப்பதாம் திகதிக்கு முன் செய்யப்பட வேண்டிய இம்முறையீடுகள் முறையிடுபவரின் சகல விவரத்துடனும் அமையவேண்டுமெனவும் அநாமதேய முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதெனவும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார், (20)

## பூநகரி அகதிகள் பயிர்ச்செய்கை

முழங்காவிலில் அகதிகளாக தஞ்சமடைந்திருக்கும் பூநகரிப் பகுதி மக்கள் ஜெயபுரத்தில் பரீட்சார்த்தமாக சிறுதானிய பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வெற்றிபெற்றுள்ளனர். 4

## ஹேமாவும் பார்வையிட்டார்

சீனன்குடா விமானத் தளத்தில் காயமடைந்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் விமானப் படையினரை ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாஸ பார்வையிட்டார்.

சிலருக்கு அவர் ஓடிக்கொலோன் இடுவதையும் கொழும்பு பத்திரிகையில் படத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**பதுளையில்......**
வித்துள்ளார்

இப்படியான அரசியல்தலையீடுகள் பொலிஸார் நடவடிக்கையைப் பாதிக்கும் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்

எனினும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக இளைஞர் எவரும் பொலிஸாரால் சித்திரவதை செய்யப்படவில்லை என அறிவித்துள்ளது.

**சமாதான ..**
புலிகள் மீது இந்தியா குற்றச்சாட்டுகளை சுமத்திவரும் இவ்வேளையில் கனடாவின் ஆலோசனைப்படி ஸ்ரீலங்கா அரசு விடுதலைப்புலிகளுடன் சமரஸ நிலைக்குவர தயாராக இல்லை என கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

வண பிதா. டொக்ரர் லோயிஸ் வில்சன் தலைமையிலான 9 அங்கத்தவரைக் கொண்ட இந்த கனேடிய அவதானிப்புக் குழு நாளை கனடா திரும்பவும் திட்டமிட்டுள்ளது இதற்கு முன்னதாக அக்குழு சிறில் ரணதுங்க, ஹமில்டன் வனசிங்க ஆகியோரையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளது.

இதனிடையே அமைச்சர் தொண்டமான் இந்தியா புறப்படுவதற்கு முன்பாக கனேடியக் குழு அவரைச் சந்தித்து ஒரு மணிநேரம் பேச்சு நடத்தியது.

கனேடியக் குழுவில் அங்கம் வகிக்கும் இருவர் தற்போது கண்டி, வவுனியா ஆகிய இடங்களுக்கு விஜயம் மேற்கொள்வதாகவும் ஏனையோர் மட்டக்களப்பு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கலை நிகழ்ச்சி இடம் மாற்றம்

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் யாழ் மாவட்டத்தினர், உரும்பிராய் அன்னை பூபதி கலையரங்கில் நடாத்த இருந்த "சந்தனக்காடு" நாடகம்) எழுச்சிப் பாடல் இசைக்குழு ஆகிய கலைநிகழ்ச்சிகளை குறித்த தினமான 01-02-92-ல் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய திறந்த வெளியரங்கில் நடாத்த உள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

**விமானப்படைப் –**
கப்படுகிறது.

இதேவேளை சீனன்குடா விமானத்தள குண்டுவெடிப்புக்கு நாசவேலை காரணமா என்று இச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திவரும் புலனாய்வுக்குழுவினர் ஆராய்ந்து வருகின்றனராம்.

இது குறித்து விமானத்தளத்தில் பணி புரிந்த பொதுமக்களும் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**மன்னார்...**
படகுகள் செல்லும் எனக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்படகுகள் மன்னார்ப் பகுதியில் இராமர் பாலம் என்ற ஆழம் குறைந்த கடற்பகுதியில் சேவையிலீடுபடவுள்ளன.

உள்ளூர்த் தயாரிப்பான இவை 40 நொட் வேகத்தில் செல்லக்கூடியவை எனவும் இவை போன்ற 8 படகுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 28-01-1992 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.